# ஆவியின் டைரி

## கோவை வானொலி ஞானவாணி புகழ்

பேரா. க.மணி

அபயம் பப்ளிஷர்ஸ்

உள்ளடக்கம்


1. ஆட்டோரைட்டிங்
2. அதிசய மீடியம்
3. மேல் கீழ் உலகங்கள்
4. குற்றமும் பாவமும் வேறு வேறு
5. மறுபிறவியும் தலைவிதியும்
6. கீழ் மேல் உலகப் பயணங்கள்
7. நாமெல்லாரும் ஆவிகளே
8. "அவர்கள்" என்ன செய்கிறார்கள்
9. ஆழ்மனது
10. ஆவியுலக வழிகாட்டிகள்
11. ஆவியுடல்
12. சொர்க்கம், நரகம், பித்ரு உலகம்
13. மறுபிறவிக்கான வரைமுறை
14. ஆவிகளின் உளவியல்
15. எண்ணங்களின் விசைகள்
16. ஆவிகள் பற்றிய சந்தேகங்கள்


## அணிந்துரை

"**சா**தாரண மிருக உள்ளத்திலிருந்து வளர்ந்து, உத்தம மனித உள்ளமாக வளர்வதுதான் வளர்ச்சி. இந்த வளர்ச்சிக்குத்தான் பூமியில் மீண்டும் மீண்டும் உடல் எடுக்கிறோம்".

"பரமபதம் என்பது மோட்சமாகும். பரம் என்றால் அதற்கு மேல் ஏதுமில்லாத முற்ற முடிவானது. பதம் என்றால் நிரந்தரமான இடம். பரமபதம் தான் மோட்சம்".

"பகடை போட்டு தாயம் விழுந்தால், ஆட்டம் துவங்கும். தாயம் கிடைப்பது அரிது. அதுபோல் மனித உடல் கிடைப்பதும் அரிது'.

"வாழ்க்கையில் நிகழும் அதிசய சம்பவங்கள் பல ஆவி உலக நண்பர்களால் நிகழ்பவை".

மேல், கீழ் உலகங்கள், மேல் உலகப் பிரவேசம், குற்றமும் பாவமும், பாவ புண்ணியங்கள், உயர்வுதாழ்வு, மறுபிறவியும் தலைவிதியும், ஏன் மீண்டும் பிறக்கிறோம், ஆவிஉடல், சொர்க்கம், நரகம், பித்ரு உலகம், புறமனம் ஆழ்மனம், ஆவேசித்தல், தற்கொலை இப்படி பல விஷயங்கள் அற்புதமாக கொஞ்சு தமிழில் தெளிவாக மணியாக விளக்குகிறார் பேரா. க.மணி.

டாக்டர். பா. இராஜாராம்.
பேராசிரியர். பணி நிறைவு
பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி. கோவை.

# முன்னுரை

**ஆ**விகள் என்றாலே எல்லாரும் பயந்து நடுங்குகிறார்கள். ஆவி என்று தனியாக ஓர் உயிரின வகை இல்லை. உயிருடன் இருக்கும் எல்லா உயிரினங்களுக்கும் ஆவி உடம்பு உண்டு. எனக்கும் உண்டு. உங்களுக்கும் உண்டு. செத்த பிறகு திடீரென்று

ஆவி உண்டாவதில்லை. உயிருடன் வாழும்போதே நாமெல்லாரும் ஆவியுடலுடன்தான் வாழ்கிறோம்.

ஒருவர் அல்லது ஒருத்தி வாழும்போது எப்படி எந்த குணங்களுடன் வாழ்ந்தனரோ அதே குணங்களுடன்தான் ஆவியாகவும் வாழ்கின்றனர். ஒருவரது திறமை, மடமை, அறிவு, கலை, கள்ளம், கபடம், விஞ்ஞானம், மெய்யறிவு, சுபாவம் ஆகிய அனைத்தும், ஆவியாக வாழும்போதும் இருக்கின்றன. இறக்கும் தருவாயில் எந்த எண்ணங்கள் இருந்தனவோ அந்த எண்ணங்களும் ஆவியாக இருக்கும்போதும் இருக்கிறது. மொத்தத்தில் ஆவி என்பது மனிதனே. தீய மனிதர்களின் ஆவி தீயதாகவே இருக்கிறது. மகான்களின் ஆவி மகத்துவமாகவே இருக்கிறது.

ஆவிகளின் உலகம் எது? அவர்கள் அங்கே என்ன செய்கிறார்கள்? அங்கிருந்து மீண்டும் எப்படி உலகில் மறு பிறவி எடுக்கிறார்கள்? சொர்க்கம், நரகம் என்பன உண்மையா? ஆவிகள் நம்மை கவனிக்கிறார்களா? நாம் அவர்களுடன் பேச முடியுமா? என்பது போன்ற எண்ணற்ற கேள்விகள் நமக்குள் எழுகின்றன. இவற்றிற்கெல்லாம் போதிய பதில்கள் இந்நூலில் கிடைக்கும். ஆவிகள் தம் கைப்பட மீடியங்களின் வாயிலாக எழுதிய டைரியின் ஆதாரத்தை வைத்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலைத் தட்டச்சு செய்த திருமதி. க.தேவகி, முதன்மை வாசகியும் பிழை திருத்த கர்த்தாவுமாகிய திருமதி என். எஸ். மாலதி ஆகியவர்களுக்கும் என் வந்தனங்கள். இந்நூலை அச்சேற்ற உறுதுணையாக இருந்த எழுத்தாளர் சி.ஆர். இரவீந்திரன், எழுத்தாளர் ஷண்முகசுந்தரம், திரு பட்டேல் இன்னும் பல நண்பர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

பேரா. க. மணி. கைபேசி: 9944562192. Kmani52@gmail.com

---

## 1. ஆட்டோரைட்டிங்

**ந**மது இஷ்டமில்லாமலேயே கை தானாக காகிதத்தில் எழுதுவது "அட்டோரைட்டிங்". திருமதி பாவநகரி என்ற அழகான, நேர்மையான வடநாட்டுப்பெண்ணின் இரண்டு மகன்களும் கார் பந்தயப் பிரியர்கள். இருவரும் கார் விபத்தில் இறந்துவிட்டனர். அவர்கள் ஆவியாக வந்து ஆங்கிலமே தெரியாத அம்மாவின் கையைப் பயன்படுத்தி வெள்ளைத்தாளில் ஆங்கிலத்தில் நிறைய ஆவிஉலக விஷயங்களை எழுதினர்.

கோழிக் கிறுக்கல் மாதிரி இருந்த கோடுகள், ஒரு மாதத்தில் அழகான ஆங்கில வாக்கியங்களாகப் பதிவாயின.

பாவநகரியின் ஆட்டோரைட்டிங் மூலம், அவரது மகன்கள் கிடைத்தற்கரிய ஆவியுலக விஷயங்களைத் தந்துள்ளனர். தயவுசெய்து திறந்த மனத்துடன், இவை வெறும் பொய் பித்தலாட்டம் என்கிற விருப்பு வெறுப்பின்றி, சிரத்தையுடன் இந்நூலைப் படிக்குமாறு வேண்டுகிறேன்.

பாவநகரி அம்மையாரின் குடும்ப விவரம்.

| | | |
|---|---|---|
| குடியிருந்த இடம் | - | பைகுல்லா, மும்பை |
| பாவநகரி பிறந்தது | - | 1925 மும்பை |
| கணவர் | - | ரத்தன் 1949 |
| குடியேற்றம் | - | 1998 வான்கூவர், கனடா. |
| இறப்பு | - | 2007 அகஸ்டு |
| மூத்த மகன் | - | விஸ்ப்பி |
| பிறப்பு | - | 9-8-1950 |
| இளைய மகன் | - | ரத்து |
|  பிறப்பு | - | 13-12-1951 |
| இருவரின் இறப்பு | - | 22-2-1980 |

விஸ்ப்பி, ரத்து இருவரும் பாவநகரிரத்தன் தம்பதியரின் பிள்ளைகள். விஸ்ப்பி, ரத்துவைவிட ஒருவயது மூத்தவன்.

பிப்ரவரி 23, 1980 இல் நடக்க இருந்த மோட்டார் கார் பந்தயத்தில் பங்கேற்க காரைத் தயார்படுத்தி, வெள்ளோட்டம் பார்க்க தாயிடம் ஆசி வாங்கிக்கொண்டு அடுக்குக்

குடியிருப்பின் இரண்டாம் தளத்திலிருந்து இறங்குகிறார்கள். இறங்கிய ரத்து, மீண்டும் மேலேறிச் சென்று தாயைக்கட்டிப்பிடித்து விடைபெறுகிறான். இரண்டு மூன்று படிகள் இறங்கிவிட்டு மீண்டும் தாயைக் கட்டிப்பிடித்து விடைபெறுகிறான். விஸ்ப்பியும் மேலே வந்து ஆசிர்வாதம் பெறுகிறான். இது 'பிரியும் விடை' போலும்!



திருமதி.பாவநகரி.
விபத்தில் காலமாகிவிட்ட இவரது இரு மைந்தர்களும் 'ஆட்டோ ரைட்டிங்' முறையில் ஆவி நிலையில் இருந்தபடி ஆவியுலகங்களைப் பற்றி எழுதித் தந்திருக்கிறார்கள்.

ஒருசில மணிநேரத்தில் இறக்கப்போகும் அவர்களுக்கு உள்ளுணர்வு சொல்லியிருக்கலாம்! இரவு 8.30. மணிக்குப் புறப்பட்டவர்கள் பொழுதுவிடிந்தும் திரும்பவில்லை! கபோலி என்ற இடத்தில் கார், விபத்துக்குள்ளாகி, இருவருமே சம்பவ இடத்தில் இறந்தனர்.

## விபத்தின்போது என்ன நடந்தது?

நெடுந்தொலைவு பந்தையத்திற்காகத் தயார் செய்யப்பட்ட கார் அது. இஞ்சினின் இறுக்கம் தளர்வதற்காக முன்னோட்டம் செய்யப்பட்டது. 1632 மைல்கள் ஓடவேண்டுமல்லவா!

நீண்டதூரம் ஓட்டிவிட்டு விஸ்ப்பியும் ரத்துவும் வீடு திரும்பிக்கொண்டிருந்தனர். விஸ்ப்பி காரை ஓட்ட, ரத்து தூங்கிக்கொண்டிருக்கிறான்.

சாலையில், காரின் முன்பாக பெரிதாய், கறுப்பாய், கொடூரமானத் தோற்றமுடைய ஓர் உருவம் தோன்றியது. விஸ்ப்பி காரை இடப்பக்கமாக ஒடித்தான். கூடவே பிரேக்கையும் மிதித்தான். பிரேக் பிடிக்கவில்லை. கார் சாலையோர மரத்தில் மோதி நின்றது.

விஸ்ப்பி, ஆட்டோரைட்டிங் மூலம் விபத்தை விளக்கினான்.

## மரணத்தின் போது

'எனது செயலற்ற உடல் வண்டிக்கு வெளியே புல் தரையில் கிடக்கிறது. நான் உடம்பில் இல்லை, வேறு ஆவி உடலில் இருக்கிறேன் என்பதை அறிந்தேன். எடையேயில்லாத ஆவியுடலில் வலியோ, வேதனையோ தெரியவில்லை. நான் இறந்துவிட்டேன் என்பதை உணர்ந்தேன். சுற்றுமுற்றும் யாரும் இல்லை. "அடக்கடவுளே, என்னை இட்டுச்செல்லக்கூட ஆவியுலகத்திலிருந்து யாரும் வரவில்லையே" என்று நினைத்தேன்.

"என்னருகே ஓர் ஆவி உருவம் நின்றுகொண்டிருந்தது. அது ரத்து என்று நினைத்து,ரத்தூ... நீயும் வந்திட்டியா?" என்று சந்தோஷமாகக் கூவினேன். அது ரத்து இல்லை'.

விஸ்ப்பி... நான் ரத்து இல்லை. அவன் இன்னும் மூச்சு விட்டுக்கொண்டிருக்கிறான்" என்றது அந்த உருவம்.

"நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை, தயவு செய்து கடவுளை வேண்டி ரத்துவைக் காப்பாற்று, என் அப்பா அம்மாவுக்கு அவனாவது மிஞ்சட்டும்" என்று கதறினேன்.

"விஸ்ப்பி... இதெல்லாம் நம் கையிலில்லை. அது இறைவனின் இஷ்டம். நான் உன் தாத்தா" என்றது என் அருகில் இருந்த உருவம்.

பாப்பி என்று செல்லமாக அழைக்கப்படும் அப்பாவின் அப்பா 1974 இலேயே இறந்துவிட்டார். அடையாளம் தெரியாத அளவுக்கு இளமை வடிவத்தில் அவர் என்னருகே நின்றுகொண்டிருந்தார்! அவர் இறந்தபோது அவருக்கு வயது 93! இப்போது அவர் 30 வயதுப் பையன் மாதிரி, அசப்பில்

ரத்துவைப் போல இருந்தார். அவரைக் கட்டிப்பிடித்து ரத்துவைக் காப்பாற்ற மன்றாடினேன்.

ரத்துவும் உடம்பிலிருந்து இப்போது வெளிவந்துவிட்டான். அவன் இறந்துவிட்ட விஷயம் அவனுக்கு இன்னும் தெரியவில்லை. அப்பளம்போல நொறுங்கிக்கிடக்கும் காரைப் பார்த்து, "காருக்கு என்னாச்சு?" அவன் குரல் அளவுக்கதிகமான கூச்சலாகக் கேட்டது.

"ரத்துவுக்கு விஷயத்தை விளக்கினோம்" அவனுக்கு அம்மா அப்பாவைப்பற்றியக் கவலை வந்துவிட்டது. இருவரும் ஓரிடத்தில் உட்கார்ந்ததோம். எப்படியாவது உடம்புக்குள் புக முடியாதா என்று யோசித்தோம். பெற்றோர்களுக்காக இல்லாவிட்டாலும் எனது மகன் ஜினாவுக்காகவாவது நான் உயிர்வாழவேண்டும் என்று எண்ணினான் விஸ்ப்பி.

எங்களை அழைத்துச்செல்ல சில நண்பர்களும் உறவினர்களும் வந்திருந்தனர். நாங்கள் புறப்படத் தயாரானோம். தெய்வமகா ஊழியர் (ஆறாவது லோகத்தின் 7 வது நிலைக்கு மேலுள்ள தூய ஜீவன். உலகங்களைப் பற்றி பின்னால் விளக்கப்படும்) ஒருவர் எங்களுடன் இருந்தார்.

"விஸ்ப்பி, ரத்து இருவரும் கண்களை மூடிக்கொள்ளுங்கள்" என்றார். நாங்கள் மேலே வேகமாகப் பறப்பதுபோல் உணர்ந்தோம். சேரவேண்டிய இடத்தை அடைந்ததும் கண்களைத் திறக்கச் சொன்னார்கள். அற்புதமான உலகம் அது! கவலையிலும் அதிர்ச்சியிலும் இருந்த நாங்கள் நல்லதொரு இடத்துக்கு வந்து சேர்ந்துவிட்ட மகிழ்ச்சியில் நிம்மதி அடைந்தோம்!

அது ஒரு மிகப்பெரிய கூடம்! ஓய்வுக்கூடம் என்று பெயர். மேகம் போன்றதொரு மிருதுவான படுக்கையில் படுக்கச் சொன்னார்கள். உடனே தூங்கிவிட்டோம்.

சிறிதுநேரத்தில் நான் விழித்தேன், ரத்து, இன்னமும் அருகே தூங்கிக்கொண்டிருந்தான். தெய்வீக ஒளிக்கதிர்கள் அவன்மீது பாய்ந்துகொண்டிருந்தது. தெய்வமகாவூழியர் என்னை எழுப்பி அவரோடு வரச்சொன்னார்.

"ரத்து எழுந்திருக்கட்டுமே, அவனுக்குத் துணையாக நான் இங்கேயே இருக்கிறேனே"

"இல்லை, நீ இங்கே இருக்கமுடியாது. ஓய்வு முடிந்ததும் ரத்து உன்னை வந்தடைவான்" வெளியே என் தாத்தா மற்றும் என் நண்பர்கள் எனக்காகக் காத்திருந்தனர். சிறிது நேரத்தில் ரத்துவும் வெளியே வந்தான். என் பெற்றோர்களின் நினைப்பு வந்தது. எங்களது இழப்பை அவர்கள் தாங்கிக்கொள்ள நான் எப்படியாவது உதவவேண்டும் என்று நினைத்தேன்!

## ஆவி மகன்களைச் சந்தித்தத் தாய்

"கடவுள் பக்தியுள்ள எனக்கு ஏன் இந்த நிலை? ஏன் கடவுள் என் மகன்களை எடுத்துக்கொண்டார்?" இந்தக் கேள்வி பாவநகரியை வாட்டி வதைத்தது.

ஓர் அதிசயம் நிகழ்ந்தது. ஈமக்கடன்கள் முடிந்து 29 நாட்கள் முடியும் தறுவாயில் பக்கத்தில் வசிக்கும் ஒரு பெண் பாவநகரியிடம் அவசரமாக வந்து ஒரு விஷயத்தைத் தெரிவிக்கிறார்.

"என் மருமகள் கச்சேரிக்குச் சென்றிருந்தாள். அங்கே இடைவேளையில் இரண்டுபேர் ஆவிகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டாள்".

"அண்மையில் இறந்துபோன இரு வாலிபர்களின் ஆவிகள் அவர்களுடைய தாய் தந்தையருடன் பேச ஆசைப்படுவதாகவும், எப்படியாவது அவர்களைக் கூட்டிவரும்படியும் அந்த ஆவிகள் கேட்டதாக அந்தப் பெண்கள் பேசிக்கொண்டிருந்தனராம்".

மருமகள் சொல்லிக்கொண்டிருந்தபோதே அந்தப் பெண்ணுக்கு பாவநகரியின் இறந்த புதல்வர்களின் நினைப்பு வந்தது. உடனே பாவநகரியிடம் வந்து தகவலைத் தெரிவித்தாள்.

சம்பாஷனையைக் கேட்ட பக்கத்துவீட்டுப் பெண்ணின் மருமகள், நல்லவேளையாகப் பேசிக்கொண்டிருந்த

அப்பெண்மணிகளின் தொலைபேசி எண்களையும் கொண்டு வந்திருந்தாள்.

அடுத்த நாளே, பாவநகரியும் ரத்தனும் பக்கத்துவீட்டு மருமகப் பெண் மூலம் உரிய பெண்மணியைத் தொடர்பு கொண்டனர். அந்தப் பெண், திருமதி கபாடியா என்ற மீடியத்தின் தொடர்பு எண்ணைத் தந்தாள்.

இப்படிச் சுத்தி அப்படிச் சுத்தி, ஒருவழியாக பாவநகரி, திருமதி கபாடியாவை அடைந்தார்!

கபாடியா ஆவித்தொடர்புடன் பரவசநிலையில் இருந்தபோது இரு வாலிபர்கள் உரத்த குரலில் "எங்களது அம்மா அப்பாவுடன் தொடர்புகொள்ள வேண்டும்" எனக் கத்துவது கேட்டது. அதை உடனே கபாடியா சபை முன் தெரிவித்தார். இந்த விஷயத்தைத்தான் கச்சேரி இடைவேளையில் இருவர் பேசினர். அதைக்கேட்ட அந்த மருமகள், மாமியார் பாவநகரியிடம் சொல்ல, சந்திப்பு நிகழ்ந்தது.

பாவநகரிரத்தன் தம்பதியர் 1980, மார்ச் 22ஆம் தேதி மும்பை, நேபியன் கடற்கரைச்சாலையில் அமைந்துள்ள கபாடியா என்ற மீடியம் வீட்டுக்கு வருகிறார்கள்.

ஆவிகளுடன் பேச வந்திருந்தவர்கள் வட்டமாக அமர்ந்திருந்தனர். நடுவில் கபாடியா இருந்தார். ஒவ்வொருவருடைய உறவினர் ஆவியுடனும் தொடர்புகொண்டு, அவர்கள் முன்னே குனிந்தபடி ஆவிகளின் குரலிலேயேப் பேசினார்.

பாவநகரியின் முன் கபாடியா நின்றார். குனிந்தார்.. "ஹல்லோ மம்மி ஃபேட்ஸோ" என்ற ஆண் குரல் வெளிப்பட்டது. விஸ்ப்பி, பாவநகரியை 'ஃபேட்ஸோ" என்றுதான் செல்லமாக அழைப்பான். அந்த ஒரு சொல்லே பாவநகரிக்குப் போதுமான ஆதாரமாக இருந்தது. பேசுவது விஸ்ப்பியேதான்!

"அம்மா, அப்பா, நான் விஸ்ப்பி பேசுகிறேன், இறந்த ஒருசில நிமிஷங்களில் நாங்கள் ஆவியுலகம் வந்துவிட்டோம். இது இறைவனின் ஆணை. அவருக்கு எது

நல்லது என்பது தெரியும்! எங்களை நினைத்து நீங்கள் அழவேண்டாம். நாங்கள் இங்கு மகிழ்ச்சியாக இருக்கிறோம். உங்களைப் பார்க்கமுடிகிறது! நீங்கள் மனம் வருந்தாமல் மகிழ்வாக இருந்தால்தான் உங்களுடன் தொடர்புகொள்ளமுடியும். நீங்கள் மன ஒருமுகப்பாட்டை வளர்த்துக்கொள்ள வேண்டும். நீங்கள் பூமியிலேயே நீண்டநாள் வாழ்ந்து நாங்கள் தரும் ஆன்மிக விஷயங்களை உலகோர்க்கு வழங்கவேண்டும்" என்றனர்.

அடுத்த சில மாதங்களில் தம் மகன்கள் கற்றுத்தந்தபடி மனத்தை ஒருமுகப்படுத்தி, அநிச்சை எழுத்து முறையைக்கற்றுக் கொண்டாள் பாவநகரி.

பேனாவைக் கெட்டியாகப் பிடிக்காமல், நோட்டுப் புத்தகத்தின் மீது வைத்துக்கொள்வார். இறந்த மகன்கள் அவளது கைகளை உபயோகித்து பேனாவை அசைத்து எழுதுவார்கள்.

அவர்கள் தந்த வியப்பான ஆவியுலக விஷயங்களைப் படியுங்கள்!

"உலகில் மதகுருக்கள் சொல்லுவதெல்லாம் உண்மையே யில்லை. அவர்கள் இறைவனின் கட்டமைப்பை அறியாதவர்கள். ‘தீர்ப்பு நாள்’ என்று அவர்கள் சொல்வது பிழையானது. உண்மையான தீர்ப்பு என்ன என்பதை இங்குவந்தவர்களால்தான் ஓரளவுக்குச் சொல்லமுடியும். இங்குள்ளவர்கள் இறைவனின் முழுமையான நடைமுறை இயக்கம் யாதென்று அறியார். இருப்பினும் சில உண்மைகளையாவது மக்களுக்கு வெளிப்படுத்துவது எங்களுக்கு வழங்கப்பட்ட வாய்ப்பு".

துஷ்டகுணம் உடையவர்கள், தம் தவறை உணர்ந்து இறைவனிடம் மன்னிப்புக் கேட்டால் நிச்சயம் அவர் உதவுகிறார். ‘உண்மையைச் சொல் இறைவன் உன்னை மன்னிப்பார்" என்பது உண்மை.

அனால், மத குருவிடம் மன்னிப்புக் கோருவதில் எந்தப் பயனுமில்லை. ‘நீங்கள் உங்களிடம்தான் மன்னிப்புக் கோர வேண்டும்".

மன்னிப்பை மிகுந்த நம்பிக்கையுடன், சிரத்தையுடன் கோருவதுதான் முக்கியம். அரைமனத்துடன் கேட்பதில் பயனில்லை. தாழ்மையுடன் பணிந்து, மனம் மாற விரும்பினால் இறைவன் அந்த நிமிடமே உதவுகிறார்.

"சக மனிதர்களை நீங்கள் ஏமாற்றிவிடலாம், இறைவனை ஏமாற்ற முடியாது".

"எதை எப்படிச் செய்தாலும் அச்செயலின் உள்நோக்கம் என்ன என்பதுதான் முக்கியம்".

---

## 2. அதிசய மீடியம்

**கா**ன்ஸெட்டா பெர்டோல்டி ஓர் அற்புதமான மீடியம். நான் அறிந்த ஆவி மீடியங்களில் மிகவும் கெட்டிக்காரப் பெண்!

அம்மா சமைத்துக் கொண்டிருக்கும்போது சிறுமி கான்ஸெட்டா "அம்மா, ஜெர்ரி மாமாவின் காலிலிருந்து ரத்தம் ஒழுகுது" என்றாள்.

அம்மாவுக்குத் தூக்கிவாரிப்போட்டு விட்டது. "என்னடி சொல்ற?" என்று பதறிக்கொண்டு வெளியே வந்தார். அங்கே அவளது தம்பி ஜெர்ரி இல்லை. கொஞ்ச நேரத்தில் தொலைபேசி மூலம் தகவல் வந்தது.

"உங்கள் ப்ரதர் ஜெர்ரி, மோட்டர் சைக்கிள் விபத்தில் அடிபட்டுக் கிடக்கிறார். காலில் பலத்த அடி"

இதுதான் கான்ஸெட்டாவின் நினைவுக்குத் தெரிந்த முதல் அமானுஷ்ய அனுபவம். அதன்பிறகு பள்ளிக்கூடத்தில் ஆண் டீச்சர்களின் ஓரினச்சேர்க்கை, சக மாணவிகளின் இரகசியங்கள் போன்றவற்றை அம்பலப்படுத்தி பிரச்சனைகளில் மாட்டிக் கொண்டது.

கான்ஸெட்டா சொல்கிறார்: "நீங்கள் நினைப்பது மாதிரி நான் தெய்விகச் சக்தி வாய்ந்தவளல்ல. கடவுள் மீது மனம் உருகிப் பிரார்த்தனை செய்யும் மகா பக்தையுமல்ல. எல்லார் மாதிரியும்தான் நானும், பையன்களுடன் ஊர்சுற்றுவது, கெட்ட வார்த்தைகள் பேசுவது, பரீட்சை ‘கோட்’ அடிப்பது, கிளாசுக்கு ‘கட்’ அடிப்பது, டீச்சர்களுக்குப் பேர் வைப்பது....."

‘நான் சிறுமியாக இருந்தபோதே எனக்கு அருகில் சிலர் பேசுவதுபோல் தெரியும். என்னை அவர்கள் சில காரியம் செய்யச் சொல்லிக் கேட்பார்கள். எனக்கு மட்டுந்தான் அவர்கள் தெரிகிறார்கள் என்கிற விஷயம் ரொம்ப நாள் வரை எனக்குத் தெரியாது.

பயந்துபோய் அப்பாவை ஓரிரவு கத்தி அழைத்தேன், அப்பா விளக்குப் போட்டதும் அவர்கள்" மறைந்து விட்டார்கள். கான்ஸெட்டாவின் காதுகளுக்கு அவர்கள்" பேசுவது அடிக்கடி கேட்கும். யாராவது எதிரில் இருந்தால் அவரிடம் இதைச்சொல்லு" என்று விண்ணப்பிப்பார்கள். அதைச் சொன்னதும் எதிரிலிருப்பவர் அதிர்ந்து, உறைந்துபோவார்.

கான்ஸெட்டாவின் அப்பா முன்பிறவியில் கான்ஸெட்டாவுக்குக் கணவனாக இருந்தவர். இதைக்கூட அவர்கள்" தான் தெரிவித்தனர்.

தனக்குக் கணவனாக வரப்போவது யார்? அவரது மூத்த மனைவியின் குழந்தைகள் யார் யார், அவர்களை வளர்க்கப்போவது தானே, தனக்குக் குழந்தை பாக்கியம் இல்லை என்பதெல்லாம் முன்னமேயே தெரிந்து கொண்டாள்.

கான்ஸெட்டாவின் தாத்தா ஒரு சிறந்த மீடியம். அவருடைய ஜீன்கள்தான் கான்ஸ்ட்டாவுக்கும் வந்திருக்கிறது. இறந்துபோன தாத்தா, அண்ணன் இருவரும் கான்ஸெட்டாவுக்கு ஆவியுலகத்திலிருந்து தொடர்ந்து தகவல்களை நேரடியாகக் கேட்ட மாத்திரத்தில் இடைவிடாது தந்து கொண்டிருந்தனர்.



கன்செட்டா பெர்டோல்டி.
ஆவிகள் இவரை நாடி வந்து
பேசுகின்றன

பிரபல நடிகர்கள், அரசியல்வாதிகள் ஆகியோர் கான்ஸெட்டாவின் வாடிக்கையாளர்களாகி விட்டார்கள். 'டி.வி ஷோ' நிறைய செய்தாள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே 'அப்பாயின்ட்மென்ட் புக்' செய்தால்தான் இவளைப் பார்த்துப் பேச முடியும் என்று, புகழ் உச்சிக்கு கான்ஸெட்டா சென்றுவிட்டார்.

நான் அவர் தந்த விஷயங்களையும் விஸ்ப்பி ரத்து ஆகியோரின் ஆட்டோரைட்டிங் தகவல்களையும் சேர்த்துத் தருகிறேன். இடையிடையே எனது சொந்த அனுபவமும் கலந்திருக்கும்!

விஸ்ப்பி, ரத்து, கான்ஸெட்டா ஆகியோர் சுயமாக ஊடக (மீடியம்) வலிமை பெற்றவர்கள். சாத்திரங்களுக்கு முரண்பாடில்லாத, அறிவியலுக்கு எதிரிடையில்லாத உண்மைகளை மட்டும் நான் இங்கு தருகிறேன்.

---

## 3. மேல் கீழ் உலகங்கள்

விஸ்ப்பி தொடர்கிறார், 'நீண்டநாள் நோய்வாய்ப்பட்டிருந்து இறப்பவர்களை இங்கு அழைத்துவர, அவரது நண்பர்கள், உறவினர்கள் உலகத்திற்குச் செல்வர். திடீரென்று ஒருவர் இறந்துவிட்டால் அழைத்துவர சிறிது

காலதாமதம் ஏற்படும். அனால், அழைத்துவர நாலுபேர் நிச்சயம் வருவார்கள். செத்தவர் போகவேண்டிய இடம் கீழுலகமாக இருந்தால் யாரும் வரமாட்டார்கள்!

மொத்தம் ஏழுலகங்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் 10 தளங்கள் உள்ளன. புரிந்துகொள்வதற்குச் சுலபமாக இருப்பதற்காக நாம் அந்த தளங்களுக்கு 0 முதல் 9 வரையிலான எண்கள் கொடுப்போம்.

ஓருலகத்தை 1-0 என்று குறிப்பிட்டால் உலகம் 1, தளம் 0 என்று பொருள்.

### உலகம் 1:

உள்ளவற்றிலேயே மிகவும் இருட்டான இடம். இவ்விடம் நமக்கு மிக அருகில், பூமியைச் சூழ்ந்தபடியுள்ளது. இது பயங்கரமான உலகம். எங்கு பார்த்தாலும் ஈரம், கருப்பு எண்ணெய் பூசிய கரடுமுரடான பாறைகள் நிறைந்திருக்கும். இங்கே ஈர்ப்புவிசை அதிகம். ஆதலால் எல்லா உயிரினங்களும் ஊர்ந்தபடிதான் நகர வேண்டும். நிமிர்ந்து நிற்பது கஷ்டம்.

இங்கிருக்கும் மனிதர்கள் அசிங்கமான, அருவருப்பானத் தோற்றத்துடன், அங்கங்கள் சிதைந்து, உருவம் குலைந்து, கொடூரமாகக் காட்சிதருவார்கள். இவர்களது மனம் பைத்தியம் பிடித்ததுபோல் உன்மத்தமாக இருக்கும். எங்கும் ஓலம், கதறல், ஊளையிடும் சப்தம், வசை வார்த்தைகள் நிறைந்திருக்கும். செடி கொடிகள் கிடையாது. கும்மிருட்டில் எங்கும் வெறிச்சோடிக்கிடக்கும். இருண்ட குகைக்குள் இருப்பது போலத் தோன்றும். உடம்பு சுமக்க முடியாதபடி கனமாக இருக்கும்.




உலகம் 2:

இங்கே வெளிச்சம் மங்கலாக, அமாவாசையில் நட்சத்திர ஒளியில் தெரியும் பூமிபோல இருக்கும். இங்கிருப்பவர்களின் உடல் உலகம் 1 இல் உள்ளதுபோல கனமாகவும், குரூரமாகவும் இருக்காது. எங்கு நோக்கினும் பாறைகள் சூழ்ந்த குகைகள் நிறைந்திருக்கும். ஒருவரை ஒருவர் வெறுத்து, கெட்ட வார்த்தைகளால் திட்டிக்கொண்டு, அடித்துத் துன்புறுத்திக்கொண்டு, அசிங்கமாக, ஆபாசமாக நடந்து கொண்டும் இருப்பர். சந்தோஷம் என்பது துளிகூட இருக்காது.

உலகம் 3:

இங்கும் வெளிச்சமிருக்காது. இருப்பினும் நிலைமை அத்தனை மோசமில்லை. உலகம் 1,2 இல் இருந்த கனம் உடம்பில் இருக்காது.

எங்கும் புகைமூடி போல் மங்கலாக இருக்கும். மனித உடம்புடைய உயிரினங்கள் இருக்கும். உடல் சிதைந்து, வயோதிகம் அடைந்து அஷ்டகோணமாக இருக்கும்.

ஒருவரையொருவர் வெறுப்புடன் குறைகூறியபடி இருப்பார்கள். எதற்கெடுத்தாலும் வெறுப்பும் கோபமும் கொள்வர். புதிதாக வரும் ஜீவர்களைச் சிறைபிடித்து

அடிமையைப்போல் நடத்துவார்கள். கெட்டச் செயல்களைச் செய்யச் சொல்வார்கள்.

உலகம் 4:

இது இடைநிலை உலகம். இதுவே நாம் வசிக்கும் பூலோகம். இதிலுள்ள பத்து தளங்களிலும் இரவு பகல் உண்டு. இங்கிருந்துதான் ஜீவர்கள் தமது அடுத்த வாழ்க்கைப் பயணத்தைத் துவங்குகிறார்கள். இவ்வுலகின் 5வது தளத்தை வந்தடைந்ததும் அங்கிருந்து மேலுலகம் அல்லது கீழ் மூன்று உலகம் சென்று பார்த்துவர அனுமதி கிடைக்கும். இத்தளத்தை 'பித்ரு' லோகம் என்பர். இறந்தபின் முதலில் செல்லுமிடம் இதுதான். பின்னரே அடுத்துத் தங்கப்போகும் இடத்தை முடிவு செய்கிறோம்.



புராணங்களில் நரகம் பற்றிய சித்தரிப்பு

**உலகம் 5:**

இங்கிருந்து தேவலோகம் துவங்குகிறது. சொர்க்கம் என்று புராணங்கள் சொல்வது இவ்விடங்களைத்தான். பூமியில்கூட மிகமிக ரம்மியமான இடங்கள் இருக்கின்றன. பூலோக சொர்க்கம் என்று அவ்விடங்களைச் சொல்வதில்லையா! அவற்றையெல்லாம் தோற்கடித்துவிடும் இந்த நிஜ சொர்க்க லோகங்கள்.

இங்கு இரவு பகல் இல்லை. அனால் இதமான, மென்மையான வெளிச்சம் எப்போதுமிருக்கும்.

இங்குள்ளவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்வார்கள். உடல் நேர்த்தியாக, குற்றம் குறைவின்றியும், லேசாக இருக்கும்!



விலங்குகள் சொர்கத்தில் சூக்கும சரீரத்தில் பசி பிணியின்றி வேட்டை, கொலையின்றி சாந்தமாய் வாழ்வதை ஓர் இடைக்கால தைலவண்ண ஓவியம் சித்தரிக்கிறது.

### உலகம் 6:

மிகமிக அழகான இடம். எங்கும் பசுமை. ஒளிப் பிரகாசம். எங்கு நோக்கினும் மரங்கள், மலர்கள். உலகில் எங்கும் கண்டிராத வண்ண மலர்கள். எப்போதும் சூரியனில்லாமலே சூரியப்பிரகாசம் நிறைந்திருக்கும். பொழுது சாய்தல் என்பதேயில்லை. "சம்மர்லேண்ட்" என்று வெளிநாட்டவர் இவ்விடத்தை வர்ணிப்பார்கள்.

உடல்கள் நேர்த்தியாக, லேசாக இருக்கும். ஒத்தாசை செய்துகொண்டு, பரஸ்பர அன்பு, பரிவுடன் வாழ்வார்கள். அவரவருக்கு விருப்பமான வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். உலகம் 6, 7 ஐ அடைந்தவர்களின் ஆழ்மனம் எப்போதும் திறந்திருக்கும். யாருக்கும் தெரியாமல், மறைவாக எந்தத் தீங்கையும், குற்றமும் செய்யமுடியாது. ஆழ்மனம்தான் ஒருவரது உண்மையான ஆன்மிக மனம். அந்த மனம், பூவுலகில் வாழும் மனிதரில் ஒருசிலருக்குத்தான் திறந்திருக்கும்.

உலகம் 7:

மிக உயர்ந்த கடைசி உலகம் இது. பூவுலக மனிதர்கள் எவராலும் கற்பனைசெய்துகூட பார்க்க இயலாத உலகம். ஏழாம் உலகின் அழகைச் சொன்னாலும் நம்பமுடியாது. இங்குள்ளவர்கள் இளமையுடன் ஒளிபொருந்திய, மிகமிக நேர்த்தியான உடல் அமைப்புடையவர்களாக இருப்பார்கள். பொறாமை, போட்டி, தாழ்வு மதிப்பீடு எதுவுமின்றி; நிறைந்த மனத்துடன், பரஸ்பர அன்புடன் வாழ்வார்கள். இது சொர்க்கத்திலேயே மிக உயர்ந்த இடம். ஏழாம் உலகத்துக்கு அப்பால் என்ன என்பது எங்களுக்குத் தெரியாது. பூவுலக வாசிகளுக்குச் சொர்க்கம் எப்படித் தெரியாதோ அதுபோல இங்கு இருப்பவர்களுக்கு 7க்கும் மேலுள்ள நிலை தெரியாது. உலகம் 7 தளம் 9 க்கு அப்பால் சென்ற ஜீவர்கள் பிறவி எடுப்பதில்லை. உலகம் ஏழில் வாழ்பவர்கள் சுத்தமான ஜீவர்கள். உலகில் அவர்கள் பிறப்பெடுக்கும்போது மேற்கொள்ளும் சிறுபிழைகள்கூட அவர்களை உலகம் 5 அல்லது 6 க்கு இறக்கிவிடும். இறைவனின் தர்மம் விசித்திரமானது. அவரது மாயையின் மறைப்புசக்தி நுட்பமானது, வலிமையானது.

உலகங்களில் மேலானதாகிய ஏழாம் உலகில் தங்கியிருக்கும் ஜீவர்களின் மனம்கூட பூரணமடையாதிருக்கிறது என்றால், பூமியில் வாழ்பவர்களின் மனவளர்ச்சியைப் பற்றி என்ன சொல்வது? ஆனால், மேலுலகத்தவரின் மனவளர்ச்சி மிக மெதுவாகத்தான் முன்னேறும். பூமியில்தான் மனவளர்ச்சிக்கு வாய்ப்புகள் அதிகம்! சித்த சுத்தம் அடைவதற்கு பூமிதான் சிறந்த இடம். ஆதலால் இப்போதே தயாராகுங்கள்.

---

## 4. குற்றம் வேறு, பாவம் வேறு

**கை**லாச பதவியடைந்தார்! வைகுண்டப் பிராப்தியடைந்தார்! என்றெல்லாம் செத்துப்போனவர்களுக்காக போஸ்டர் அடிக்கிறார்கள்,

பத்திரிக்கைகளில் விளம்பரம் தருகிறார்கள். இது செத்தவர்களுக்கு நாம் காட்டும் குறைந்தபட்ச மரியாதை!

உண்மை இதுவல்ல. நாம் பூமியைச் சொந்த உலகமாகவும்; மேல், கீழ் உலகங்களைச் செத்தபிறகு செல்லுமிடங்களாகவும் நினைக்கிறோம். பார்க்கப்போனால் செத்தபின் செல்லும் ஆவி உலகம்தான் ஜீவர்களின் உண்மையான உலகம். இந்த உண்மையைப் புரிந்துகொண்டால் ஒரு நிமிடம்கூட பூமியில் இருக்க விரும்ப மாட்டோம்.

அனைவருக்கும் நினைவுகள் மறைக்கப்பட்டுள்ளதே தவிர, அழிந்துவிடுவதில்லை! எல்லா விஷயங்களும் அழ்மனத்தில் பதிவாகிவிடுகின்றன. ஆழ்மனத்திற்குச் சித்தம் என்றும் பெயருண்டு.

ஒருவர் சட்டப்படி குற்றம் செய்யாதவராக இருக்கலாம். தப்பே செய்யாதவர் என்றுகூடப் பெயர் எடுத்திருக்கலாம். நேர்மையானவர், பொய் பேசாதவவர், கையாடல் செய்யாதவர் என்று புகழப்படலாம். அவர் சட்டப்படி குற்றம் செய்யாதவர்தான். இதில் சந்தேகமேயில்லை. அனால், அவரைப் பாவம் செய்யாதவர் என்று சொல்லமுடியாது. இவ்வுலகில் செய்யும் குற்றங்கள் பல பாவங்களே அல்ல. அதே சமயம் மனிதர்களால் பாவம் என்று சொல்லப்படுபவை குற்றங்களும் அல்ல!

உதாரணமாக, மகா சுயநலக்காரராக ஒருவர் இருக்கலாம். உலகப் பார்வையில் அது குற்றம் இல்லை. அவரைச் சுயநலக்காரர் என்று சட்டம் தண்டிப்பதில்லை. அனால் சுயநலம் உள்ளத்தின் அழுக்காகும். அது மாபெரும் பாவமாகும்!

மனிதச் சட்டங்களை மீறுபவர்கள் குற்றவாளிகளாகக் கருதப்படலாம். அனால் அவர்கள் இறைவன் பார்வையில் பாவிகள் அல்லர். ஈஸ்வர தர்மத்தை மீறுபவர்கள்தான் பாவிகள்.

‘தர்ம–அதர்மம்’ என்பதுவேறு, ‘சரி–தவறு’ என்பது வேறு! மனிதன் ஏற்படுத்திக்கொண்ட விதிகள் வேறு, இறைவன் வகுத்த விதிகள் வேறு.

டிராஃபிக் விதிகள், வருமான வரிச் சட்டங்கள் போன்றவை மனிதன் ஏற்படுத்திக்கொண்டவை. இவை நாட்டுக்கு நாடு வேறுபடும். ஒரு நாட்டில் இடப்பக்கம் வாகனம் ஓட்டினால் தண்டனை, இன்னொரு நாட்டில் வலப்பக்கம் ஓட்டினால் தப்பு. இந்த வருட வருமானவரி வரம்பு, அடுத்தவருடம் மாறும். ஆனால், தர்மம் அதர்மம் என்பவை உலகம் முழுவதற்கும் ஒன்றுதான். கொலை, களவு, ஹிம்சை, பொய் முதலானவை அதர்மங்கள் என்பது எல்லாருக்கும் தெரியும். இது ஊருக்கு ஊர் மாறாது. ‘கொலை செய்வது தப்பில்லை’ என்று எந்த ஊரிலும் சொல்லுவதில்லை.

## பாவமும் புண்ணியமும்

எவை உனக்குத் துன்பகரமான அனுபவங்களை விளைவிக்குமோ அவற்றை இன்னொருவருக்கு நீ செய்தால் அது பாவம் (அதர்மம்).

எவை உனக்கு இன்பகரமான அனுபவங்களை விளைவிக்குமோ அவற்றை இன்னொருவருக்கு நீ செய்தால் அது புண்ணியம் (தர்மம்).

இதுதான் தர்ம விதி. மனிதனைப்போல செயல் சுதந்திரம் படைத்த உயிரினம், எந்த உலகத்தில் வசித்தாலும் இந்த தர்மவிதி அங்கேயும் இருக்கும்.

## பாவ புண்ணியங்களை அனுபவித்தே தீர வேண்டும்!

பாவம் என்பது துன்பகரமான அனுபவங்களை வழங்கும் கர்மபலன்கள். ஒருவர் அனுபவிக்கும் துன்பங்கள் யாவும் அவர் ஏற்கெனவே செய்த அதர்மங்களின் பலன்களாகும். அவ்வாறே ஒருவரது சுக அனுபவங்கள்யாவும், அவர் ஏற்கெனவே இந்தப் பிறவியிலோ அல்லது சென்ற பிறவிகளிலோ செய்த தர்மங்களின் பலன்களே ஆகும்.

பிரார்த்தனைகளாலும் பிராயச்சித்த கர்ம சடங்குகளை மேற்கொள்வதாலும் பாவங்களை ஓரளவுக்குக் குறைக்கலாம் ஆனால் அழிக்க முடியாது.

## உயர்வும் தாழ்வும்

நடுத்தரக் குடும்பத்தில் வாழ்கிறவரை பணம் படைத்தவர்கள் ஏறெடுத்தும் பார்க்கமாட்டார்கள். ஒருவர் பாமரன், புகழ், அந்தஸ்த்து, செல்வாக்கு இல்லாத சாதுவாக இருக்கலாம். அவரது எளிமை, ஏழ்மை, பணிவை மக்கள் தப்பாகப் புரிந்துகொண்டு கேலி பேசலாம். ஆனால், ஆவியுலகங்களில் அவரது மதிப்பே வேறு! அவருக்குத் தரப்படும் மரியாதை அதிகம். நாட்டின் பிரதமராகவும், கட்சித் தலைவராகவும், மேதையாகவும், உலகம் வியக்கும் பணக்காரராகவும், அதிகாரியாகவும் இருப்பவர்கள் ஆவியுலகில் அதே அந்தஸ்த்தில் இருப்பார்கள் என்பது நிச்சயமில்லை.

ஆவியுலகில் எல்லாரும் சமம். கூலித்தொழிலாளியாக தர்மம் தவறாமல் வாழ்ந்தவர், அனைவரையும் உருட்டி மிரட்டி வேலை வாங்கிய மேலதிகாரிக்கு ஆவியுலகில் வழிகாட்டும் தெய்வமகா ஊழியராக இருந்து உதவிசெய்வார்! ஆதலால், இப்பூவுலகப் பெருமைகளையும், புகழையும், செல்வாக்குகளையும், வசதிகளையும் பெரிதாகக் கருதாதீர்கள்.

## சாத்தான் இல்லை

இறைவனுக்கு நிகரான, எதிர் வல்லமை படைத்த ஒரு சக்தி இருக்கிறது; அதன் பெயர் சைத்தான், சாத்தான், என்றெல்லாம் சிலர் சொல்வார்கள். இவர்கள் சொல்வதில் சிறிதும் உண்மையே கிடையாது.

‘ஈஸ்வரன், ஜீவன்’ என்று இரண்டுதான் உள்ளது. இரண்டும் செயல்தன்மையில்தான் வேறு வேறு. உண்மைத் தன்மையில் இரண்டும் ஒன்றே.

பலரக ஜீவர்கள் உள்ளன. சில ஜீவர்கள் (மனிதர்கள்) சாத்தானைப்போல் இருக்கலாம். ஆனால் சாத்தான் என்று தனியாக ஒரு சக்தி இறைவனுக்கு எதிர் நிகராக இல்லை.

பூமியில் நல்ல, கெட்ட, துஷ்ட உயிர்களுடன் சேர்ந்து வாழவேண்டிய கட்டாயம் உள்ளது. ஆனால் ஆவி உலகங்களில் நல்ல ஆவிகளுக்குத் தனியாகவும், கெட்ட, துஷ்ட ஆவிகளுக்குத் தனியாகவும் உலகங்கள் உள்ளன. அவை கலப்பதில்லை. அதைத்தான் சொர்க்கம், நரகம் என்றும் கீழ்/மேல் உலகம் என்றும் அழைக்கிறோம்.

கீழுலகங்களுக்கு அனுப்பப்படும் துஷ்ட, கெட்ட ஆவிகள் (அதர்ம வழியில் வாழ்ந்த மனிதர்கள்) கூட்டமாக வாழ்கின்றனர். அவர்களிடம் வெறுப்பு, பொறாமை, நேர்மையின்மை, தீயஉணர்ச்சிகள், கெட்ட எண்ணங்கள் நிரந்தரமாகக் குடிகொண்டிருக்கின்றன. மனம் திருந்த ஆசையிருந்து உதவிக்கு அழைத்தால், அவ்வழைப்பு மெய்யாகவே இருந்தால் மேலுலகிலிருந்து தெய்வமகா ஊழியர்கள் உதவிக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

கீழுலக ஆவிகள் ஆன்மிக வளர்ச்சியைப் பெறவே வழியில்லை. சுற்றியுள்ள கெட்ட ஆவிகளின் துஷ்ட எண்ணங்களும் அறியாமையும் அவர்களை முன்னேற முடியாதபடி தடுக்கும்.

எத்தனை மோசமான ஆவியாக இருந்தாலும்கூட வருந்தி அழைத்தால் உதவி கிடைக்கும். இருப்பினும் பல நூற்றாண்டுகளாகக் கீழுலகிலேயே காலம் தள்ளும் ஆவிகளும் உள்ளன. மனம் திருந்தி வெளியேறத் துடிக்கும் ஆவிகளைக் கெடுத்து, மேலெழ ஒட்டாமல் அவை தடுக்கின்றன. எனவே, பூமியில் கிடைக்கும் நல் வாய்ப்பை தயவு செய்து நழுவவிடவேண்டாம். அதர்ம வழி அபத்தானது!

இறைவன் கருணையுடையவராக உள்ளதால் கீழுலகங்களுக்கும் நிறைய வழிகாட்டி ஆவிகளைத் தக்க பாதுகாப்புடன் அனுப்பிவைக்கிறார். உண்மையிலேயே மன்னிப்புக் கோருபவர் அங்கேயும் ரக்ஷிக்கப்படுகிறார். நிரந்தர நரகம் என்பதோ, நிரந்தர சொர்க்கம் என்பதோ

இல்லை. பாவம் தீர்ந்ததும் நரகத்திலிருந்து விடுதலை கிடைத்து, அடுத்த பிறப்பு தரப்படுகிறது. சொர்க்கத்தில் வாழும் புண்ணியகாலம் முடிந்ததும் மறுபடியும் பூமியில் பிறந்தாகவேண்டும்.

## தீர்ப்பு நாள் என்பது பொய்

பல சமயத்தவர்கள் மறுபிறவியை நம்புவதில்லை. பாவ–புண்ணியம், தர்ம–அதர்மம், சொர்க்க–நரகம், மறுபிறப்பு என்பதெல்லாம் பொய் என்று சொல்வார்கள்.

சில மதத்தவர்கள் தீர்ப்புநாள் என்று ஒருநாள் வரும், அதுவரை செத்தவர்களின் ஆவிகள் தூங்கும். மீண்டும் ஒருநாள் உயிர்ப்பிக்கப் பட்டு பரமபிதா தீர்ப்பு சொல்லுவார். பாவம் செய்தவர்கள், அதாவது அவர்கள் சொல்லும் இறைவனை நம்பாதவர்கள், எத்தனை நல்லவர்களாக வாழ்ந்திருந்தாலும் நிரந்தர நரகத்தில் தள்ளப்படுவார்கள்.

யாரெல்லாம் பெயரை மாற்றிக்கொண்டு அவர்கள் மதத்தை ஏற்றுக்கொண்டார்களோ அவர்கள் நிரந்தர சொர்க்கத்துக்கு அனுப்பப்படுவார்கள் என்று பிதற்றுகிறார்கள்.

இது உண்மையில்லை. செத்தவர்கள் தீர்ப்புநாள் வரை தூங்குவார்கள் என்பதும், தீர்ப்புநாள் என்பதும் பொய்.

பூமியில் ஒருவர் எப்படி விழிப்புடன் இருக்கிறாரோ அதைவிட அதிக விழிப்புடன் இறந்தபின் இருக்கிறார். பித்ரு லோகத்தில் (உலகம் 4.5) பெறும் சிறு சிகிச்சையின்போது கிடைக்கும் தற்காலிகத் தூக்கத்தைத் தவிர வேறு தூக்கம் என்பது ஆவிஉலகில் கிடையாது.

ஆவிகளுக்கு தூல உடல் (மாமிச உடல்) இல்லாததால் வலி, பசி, நோய், மலஜலம் கழித்தல், இனப்பெருக்கம் செய்தல் போன்ற உபாதிகள் இல்லை. எடைகுறைந்த ஆவி உடலுடன் மகிழ்ந்திருக்கிறார்கள்.

இஷ்டப்பட்ட வேலையில் களைப்பின்றி ஈடுபடுகிறார்கள். வீட்டைப்பூட்டி வைக்கவேண்டும், துணி துவைக்கவேண்டும், சமையல் பண்ணவேண்டும், வேலைக்குப் போய் சம்பாதிக்க வேண்டும் என்கிற

அவசியமில்லை. சண்டைச் சச்சரவும் போட்டிப் பொறாமையும் இல்லை.

படிக்க விரும்புபவர் படிக்கலாம். நண்பர்களைச் சந்திக்கலாம், வழிபாடு செய்பவர் வழிபடலாம். என்ன நினைத்தாலும் விரும்பினாலும் செய்யலாம்.

மேலுலகவாசிகள் அனைவரும் 'தேவர்' எனப்படுவார்கள். பூமியில் வாழ்ந்த அதே மனிதர்கள்தான் இவர்களும். அதே அறியாமையுடன் கற்கவேண்டிய நிலையில்தான் தேவர்களும் உள்ளனர். ஆவியுலகில் இன்பம் துய்க்கத்தான் அதிக வாய்ப்பு கிடைக்கிறது. தன்னறியாமை நீங்கி முக்தியடைவது அவரவர் முயற்சியைப் பொறுத்தது.

---

## 5. மறுபிறவியும் தலைவிதியும்

**ஒ**வ்வொரு மனிதனுக்கும் மனத்தில் சித்தம் என்றொரு அம்சம் உண்டு. அது மறைவான மனம்; ஆழ்மனம். ஒருவர் செய்யும் பாவ புண்ணியங்களின் கர்மங்கள் அதில் அவ்வப்போது பதிவாகிவிடும். கம்ப்யூட்டரில் அவ்வப்போது செய்த வேலைகள் நினைவகத்தில் சேமித்து வைத்து வேண்டும்போது ஃப்ளாஷ் டிரைவில் நகல் எடுத்துக்கொள்வதுபோல செய்த காரியங்கள் எண்ணிய எண்ணங்கள் யாவும் உடனுக்குடன் சித்தத்தில் பதிவாகின்றன.

ஒவ்வொரு பிறவியிலும் செய்த கரும பலன்கள் தக்கத் தருணத்தில் வெளிப்படுகின்றன. செய்த பாவங்கள்யாவும் துன்ப அனுபவங்களைத் தரும் சந்தர்ப்பச் சூழ்நிலைகளை ஏற்படுத்தித் தருகின்றன. செய்த புண்ணிய கர்மங்கள் உரிய பலனை தக்கசமயத்தில் இன்பகரமான சந்தர்ப்ப சூழ்நிலைகளாக வெளிப்படுகின்றன. இதைத் தான் தலைவிதி என்கிறோம். அவரவர் கர்ம வினைப்பயன்களை அவரவர்களே அனுபவிப்பது தலைவிதி என்றழைக்கப்படுகிறது.

இந்த விஷயங்கள் ஆழ்மனத்திற்குத்தான் தெரியும். வெளி மனத்திற்குத் தெரியாது. ஆதலால்தான் 'ஏன் எனக்கு

இந்தத் துன்பம் நிகழ்கிறது" என்று அறியாமல் புலம்புகிறோம். ஆழ்மனதாகிய சித்தத்துக்குத்தான் இந்த இரகசியம் தெரியும். வினை விதைத்தவன் வினை அறுப்பான், திணை விதைத்தவன் திணை அறுப்பான் என்பது நூற்றுக்கு நூறு உண்மை.

## கழுதைப் பிறவிகள்

கொலைச் செயல்கள், ஹிம்சைகள், அதர்ம முறையில் பணம் சேர்ப்பது, ஊழல் செய்து மக்கள் பணத்தைக் களவாடுவது, ஏழைகளை ஏமாற்றி நிலம் கையகப்படுத்துவது, குழந்தைகளையும் இளம்பெண்களையும் விலைக்கு விற்பது, போதைப்பொருள் விற்றுச் சம்பாதிப்பது போன்ற கொடூரமான செயல் புரிபவர்கள் பூமியில் சந்தோஷமாக சகல சௌபாக்கியங்களுடனும் வாழலாம். இருப்பினும் அவர்கள் இறந்தபிறகு (கீழுலகம்) 1, 2, 3 உலகங்களுக்குச் செல்லும்போதுதான் எல்லாச் செயலுக்கும் தக்கப் பலன் உண்டு என்பது தெரியும்.

குளிர், இருட்டு, ஈரம், பாறை, ஊர்ந்து செல்லும் ஜந்துக்கள் நிறைந்த இடத்தில்; துளிகூட ஒளியே இல்லாத கும்மிருட்டில், அழுகிப்போய், சிதைந்துகிடக்கும் அங்கங்களைக் கொண்ட குரூர உருவமுடைய மனிதர்களுடனும் மிருக மனித உடலுடைய விநோதப் பிராணிகளுடன் வாழவேண்டிவரும்.

"ஐயோ இந்த கதி வேண்டாம்" என்றால், பூமியில் கழுதையாகப் பிறந்து இறந்து, பிறந்து இறந்து செய்த பாவங்களைக் கழிக்கலாம். கழுதையாக இருந்தாலும் மனித நினைவுகளுடன் செய்த பாவச்செயல்கள் முழுவதும் நினைவில் நிற்க, கஷ்டமும் அவமானமும் பட்டு வாழவேண்டி வரும்.

வாயில்லா ஜீவர்களை அன்புடன் அணுகுங்கள். அவற்றில் மனித ஜீவனும் ஒன்றிரண்டு இருக்கலாம். வீட்டில் வளரும் செல்லப்பிராணிகளில் பல, பாவத்தைக்

கழிப்பதற்காகப் பிறப்பெடுத்த மனிதர்களே! அவர்களிடம் முழு மனித நினைவும் இருக்கும்!

## மறுபிறவி

மறுபிறவி உண்டு. அறிவியல் பூர்வமான சான்றுகளைத் திரட்டி நான் எழுதியிருக்கும் ‘அறிவியல் பார்வையில் மறுபிறவி" எனும் நூலைப் படித்து விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

அண்மையில் செய்தித்தாளில் ஒரு செய்தி படித்தேன். இஸ்ரேல் நாட்டு எல்லையருகே, சிரியாவில் மூன்று வயதுச் சிறுவன், பேச அரம்பித்ததுமே தனது பூர்வ ஜென்ம நிகழ்ச்சிகளைச் சொல்லத் தொடங்கினான்.

அவன் பிறந்தபோதே தலையில் வெட்டுக்காயத் தழும்புடன் பிறந்தான். ‘என்னைக் கோடரியால் தலையில் வெட்டிக் கொன்றனர்" என்று சொன்னதுடன் எப்படி, எப்போது, யார் யார் கொன்றனர் என்கிற விஷயங்களையும் தந்தான். சட்டத்தின் பிடியிலிருந்துத் தப்பித்துக்கொண்ட கொலையாளிகள், இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்; அவர்களை என்னால் அடையாளம் காட்டமுடியும் என்றும், அவர்களது பெயர், விலாசம் முதலியவற்றையும் சொன்னான்.

குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. எங்களுக்கு ஏதும் தெரியாது என்று சொல்லிவிட்டனர். அனால், அச்சிறுவன் அருகிலுள்ள கிராமத்தில் தன்னை வெட்டிப் புதைத்த இடத்தைக் காட்டினான். அவன் காட்டிய இடத்தில் தோண்டியபோது அவனது பூர்வ ஜென்ம எலும்புகள் இருந்தன. கபாலத்தில் கோடரியால் ஏற்படுத்திய வெட்டும் இருந்தது. அந்த வெட்டு, இப்போதைய வடுவுடன் பொருந்தியிருந்தது! (தி இந்தியன் எக்ஸ்ப்ரஸ், மே, 21-2014).

மகன்களின் உதவியால் ஆட்டோரைட்டிங் முறையில் ஆவியுலக விஷயங்களை நமக்கு அளிக்கின்ற பாவநகரி-ரத்தன் தம்பதியரின் பூர்வ ஜென்மங்களை ஆவியுலகில்

வாழும் அவர்களது மகன்கள் ரத்துவும் விஸ்பியும் தெரிவித்தனர்.

பாவநகரி- பிறந்தது மும்பையில், 27 செப்டெம்பர் 1925. முன் ஜென்மத்தில் இவர் (பாவநகரியின்) தன்னுடைய கொள்ளுப்பாட்டியாக இருந்தார் (1800). பாட்டியே பேத்தியாகப் பிறந்திருக்கிறார்!

புர்ஸின் விஸ்ப்பி - ஆவியாக இருக்கும் விஸ்ப்பியின் மகன்: பிறந்தது 5 அகஸ்டு 1980. இவன் பூர்வ ஜென்மத்தில் விஸ்ப்பியின் சித்தப்பா (5-1-1969). அதாவது விஸ்ப்பியின் சித்தப்பா, மகனாகப் பிறந்திருக்கிறார்.

கங்கா என்பவன் பாவநகரி குடும்பத்தில் பிறந்தவன். பிறந்தது 1995 இல். பூர்வஜென்மத்தில் இவன் தாய்வழி தாத்தா (இறந்தது 15-1-1994). இறந்த ஒரு வருடத்தில் கங்காவாகப் பிறந்திருக்கிறார்.

## நம் விதி நம் கையில்

பித்ருலோகம் என்பது நாலாவது உலகத்தின் ஐந்தாம் நிலை. இது ரயில்வே சந்திப்பு நிலையம் போன்ற இடம். இறந்தவர்கள் முதலில் இங்குதான் செல்கிறார்கள். இங்கிருந்துதான் கீழ், மேல், பூமி முதலான இடங்களுக்குச் செல்லவேண்டும். பித்ருலோகமும் மற்ற லோகங்களைப்போல் தற்காலிகமான இடமே.

உயர் உலகங்களில் இருக்கும் ஆவிகளுக்கு, பூமியில் வாழ்பவர்களின் எதிர்கால நிகழ்ச்சிகள் முன்கூட்டியேத் தெரியும். ஆனால், அவர்கள் வாழும் உலக நிர்வாகிகளின் உரிய அனுமதியின்றி நமக்குத் தெரியப்படுத்த இயலாது. ஆதலால் எதிர்காலம் பற்றிய கேள்விகளை ஆவிகளிடம் கேட்டுத் தொல்லைப்படுத்தக் கூடாது. எல்லாரது வாழ்க்கையின் போக்கும் பிறக்கும் முன்னரே நிச்சயிக்கப்படுகிறது என்பதை மட்டும் உணர்ந்துகொண்டால் போதும்.

ஆவி உலகில், குறிப்பாக பித்ரு லோகத்தில் (உலகம் 4 தளம் 5) ஈஸ்வர ஏற்பாடுகள் விசித்திரமானவை. ஒவ்வொரு

ஆவியும் தம் எதிர்கால வாழ்க்கையைத் திட்டமிட்டு, பூமியில் பிறக்கலாம்.

ஒவ்வொருவரும் தன்னைப் பெற்றெடுக்கப்போகும் தாய் தந்தையரை விருப்பத்துடன் தேர்வுசெய்து கொள்ளலாம்.

முன் ஜென்மங்களில் நெருங்கிய உறவுகளாக வாழ்ந்தவர்கள் அடுத்துவரும் ஜென்மங்களில் தாய்-மகன்-மகள்; கணவன்-மனைவி-சித்தப்பா-மகன், மாமன்-மருமகன் என்ற உறவுகளில் பிறக்கிறார்கள். ஒருவருக்கொருவர் செய்துகொண்ட கர்மவினைப் பயன்களைக் கொடுத்துப் பெற, அனுபவிக்க இப்படிச் சேர்ந்தே பிறக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

கர்மபலனுக்கேற்றபடி தாய் அமைகிறாள். நல்ல குணவதியையோ அல்லது துஷ்ட குணமுடைய பெண்ணையோ ஒருவர் தாயாகப் பெறவேண்டி வரலாம். இறைவன் நம் தலையில் எதையும் சுமத்துவதில்லை. ஒருவரது விருப்பத்துக்கு எதிராக பெற்றோர்கள் தரப்படுவதில்லை.

துஷ்டகுணமுடைய ஒரு தாய்க்குப் பிறந்து, துன்பகரமான இளம்பிராயத்தை அனுபவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டவருக்கே அத்தகைய தாய் தரப்படுகிறது.

மனம் திருந்தி நல்வழியில் ஆன்மிக வளர்ச்சியடைய வேண்டும் என்கிற திட்டத்துடன் இருப்பவர்கள் அப்படிப்பட்ட தாயையும், வாழ்க்கையையும் தேர்ந்தெடுத்துக்கொள்கிறார்கள். அவர்களது புண்ணிய பாவங்கள் இதற்கு இடம்கொடுக்க வேண்டும்!

## எதுவும் எதேச்சையல்ல

பூமியில் நடப்பவை எதுவும் எதேச்சையான நிகழ்ச்சிகள் அல்ல. ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் ஏற்படும் நிகழ்ச்சிகள், சம்பவங்கள், உறவுகள் யாவும் ஏற்கெனவே, பித்ருலோகத்தில் நம்மால் திட்டமிடப்பட்டு, நம்மிஷ்டப்படி ஏற்படுத்திக்கொண்ட நாடகங்களே.

வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களுக்காக யாரும் யாரையும் பழிசொல்ல வேண்டியதில்லை. துன்ப இன்பங்களுக்கு அவரவரே பொறுப்பு, அவர்களே காரணம்! "இன்பமும் துன்பமும் பிறர் தர வாரா" என்கிற கணியன் பூங்குன்றனாரின் வாக்கு தெய்வ வாக்கு!

பித்ருலோகம் சென்று, அங்கிருந்து பூமிக்கே வராமல், உயர்லோகங்களுக்குச் செல்லமுடியும்! ஆன்மிக வளர்ச்சியைப் பொறுத்த வரை மேலுலக சுகபோக வாழ்க்கை மிக தாமதமானதாகும். பூமியில் ஒருபிறவியில் பெறும் ஆன்ம வளர்ச்சியை சொர்க்க லோகங்களில் பல நூற்றாண்டுகள் சேவை புரிந்தால்தான் பெறமுடியும். மேலும் கொண்டுவந்த புண்ணியங்கள் தீரும்வரைதான் மேலுலகங்களில் இருக்க முடியும். ‘விசா எக்ஸ்பைரி’ ஆனதும் பித்ருலோகம் மீண்டும் திரும்பி, பூமியில் பிறக்கவேண்டி வரும்!

## அதர்மங்களை ஆதரிக்காதீர்

அதர்மம் செய்யாமல், தர்மியாக வாழ்வதே நல்லது. நமது ஆசைகளைத் தர்ம வழியில் நிறைவேற்றிக்கொள்வதில் தப்பில்லை. நாம் அதர்மம் செய்யாதிருப்பதுடன் பிறர் அதர்மம் செய்வதை ஆதரிக்கக்கூடாது. துஷ்ட ஜனங்களைப் போற்றாதீர்கள். அவர்களுக்கு உதவாதீர்கள். அதர்மம் செய்ய இடம் தராதீர்கள். அவர்கள் மனம் திருந்த விரும்பினால், அது நிச்சயம் என்பதை உறுதிசெய்துகொண்டபின், உதவிசெய்யுங்கள்.

உதவலாமா, கூடாதா என்பதை முடிவெடுக்க முடியவில்லை என்றால் ஆவியுலக உறவினர்களின் உதவியை நாடுங்கள். இறைவன் அவர்கள் வாயிலாக நல்லவழியைக் காட்டுவார்.

---

*********************************************

(மேலும் இந்த தகவல்களை முழமையாக தெரிந்துகொள்ள "ஆவியின் டைரி" புத்தகத்தை வாங்கி படிக்கவும்.

நன்றி தொடர்புக்கு 90956 05546)